வேலையை பர்மனென்ட் செய்வது குறித்து. 'கன்ஃபர்மேஷன்' குறித்து கேட்கப்பட்ட கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை சொசைட்டிகள் இருக்கின்றன என்கின்றார்கள். 1453 என்று கருதுகிறேன், ஏறத்தாழ மீதி குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்குத் தக்க பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 348, திரு. ஏ. தா. பொன்னுவேலு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

348—

திருமாந்துறை-வி. கீரனூர் பாதையில் மேம்பாலம் அமைத்தல்.

*9778—திரு. ஏ. தா. பொன்னுவேலு:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி-சென்னை 45-ஆம் தேசிய நெடுஞ்சாலையின் அருகாமையில் திருமாந்துறையிலிருந்து வி. கிரனூர் செல்லும் பாதையில் ஒரு மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இச்சாலை ஒரு ஊராட்சி சாலையாகும். இச்சாலையில் பாலம் கட்டும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளியவர்களுடைய இன்னல்களைப் போக்கி மாதர்குல மணிவிளக்காக விளங்கிக்கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில் பொதுப் பணித் துறையில் புரட்சிகரமான செயல்களைச் செய்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்வது, இந்தக் கால கட்டத்தில் சென்னை டு திருச்சி செல்லும் நெடுஞ்சாலைப் பாதையின் அருகாமையில் திருமாந்துறைக்கும் கீரனூருக்கும் இடையே ஒரு தாழ்வான பள்ளம் இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் வெளியூருக்குச் செல்லவும், கர்ப்பிணி பெண்கள் பக்கத்திலே இருக்கின்ற மருத்துவ மனைக்குச் செல்வதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே கேட்பாரற்று பார்ப்பாரற்று கிடந்த அந்த சூழ்நிலையைப் போக்கி இன்றைக்கு அவ்வப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்ற பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அந்தப்

1993 ஏப்ரல் 15]

பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான—அந்த மக்களுடைய குறைகளை தீர்க்கும் அளவுக்கு—அந்தச் சாலையில் ஒரு பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு பாலங்களைக் கேட்டிருக்கின்றார்கள். இப்போது ஒரு பாலத்தைக் கேட்கிறார். இதுபோன்று பல்வேறு தொகுதிகளில் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த ஆண்டு ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்ற அளவிலே எந்த அளவுக்கு எடுக்க வேண்டும் என்று அவர் சொன்னால் அதற்கு முன்னுரிமை கொடுத்து இந்தப் பாலம் தான் வேண்டுமென்று சொன்னால், பாலம் எடுப்பதிலே முன்னுரிமை எதற்கு வழங்கலாம் என்று அவர் தெரிவித்தால் இந்தப் பாலம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்றவற்றிற்கு வாய்ப்பு இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய படி அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு திருமாந்துறை-கீரனூர் இடையில் அமைக்கும் பாலத்தை அமைத்துக்கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்தத் திட்டம் செயல் ஆக்கத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 349, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்:

349—

பவானிசாகர் அணையில் தூர்வாரும் பணி

* 10682—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணையில் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

TRUTH ALONE TRIUMPHS